நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாய விளைபொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை: விவசாயிகள் சங்கம் அதிருப்தி**

First Published : 11 Jun 2011 01:55:53 PM IST

கிருஷ்ணகிரி, ஜூன் 10: கிருஷ்ணகிரியில் தமிழக விவசாயிகள் சங்கத்தின் ஒரு பிரிவினரின் சார்பில் மாவட்ட செயற்குழு கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு அதன் மாவட்டத் தலைவர் ஜி.ஆர்.லோகாபிராம் தலைமை வகித்தார். மாநிலத் தலைவர் கே.வெங்கடாசலம், மாவட்டச் செயலர்கள் என்.எஸ்.செந்தில்குமார், சரவணன், கே.பி.பெரியண்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

÷கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

÷ஜூலை 5-ம் தேதி ஈரோட்டில் உழவர் தின மாநாடு நடத்தப்படும். இந்த மாநாட்டில் கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து ஏராளமானோர் பங்கேற்பது.

மத்திய அரசு விவசாய விளைபொருட்களுக்கு அறிவித்துள்ள குறைந்தபட்ச ஆதரவு விலை விவசாயிகளிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. நெல்லுக்கு ரூ,2 ஆயிரமும், கரும்புக்கு ரூ.3 ஆயிரமும், பாலுக்கு ரூ.25 குறைந்தபட்ச ஆதரவு விலையை அரசு அறிவிக்க வேண்டும். ஆற்றிலிருந்து வெளியேறும் உபரி நீரை விவசாயிகள் பயனடையும் வகையில் அனைத்து ஏரிகளுடன் இணைக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருவட்டாரில் 13 மி.மீ. மழை**

First Published : 11 Jun 2011 02:16:05 PM IST

நாகர்கோவில், ஜூன் 10: கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாரில் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 13 மி.மீ. மழை பதிவாகியிருந்தது.

மாவட்டத்திலுள்ள அணைப் பகுதிகளிலும் பிறஇடங்களிலும் பெய்த மழையளவு (மி.மீட்டரில்):

பேச்சிப்பாறை- 5, பெருஞ்சாணி- 4.2, சிற்றாறு 1- 2, அடையாமடை- 7, புத்தன்அணை- 4, நாகர்கோவில்- 6.4, பூதப்பாண்டி- 1.4, சுருளோடு- 12.4, கன்னிமார்- 2.7.

பேச்சிப்பாறை அணைக்கு விநாடிக்கு 244 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையின் நீர்மட்டம் 45.94 அடியாக இருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 202 கனஅடி தண்ணீர் உபரியாகத் திறந்துவிடப்பட்டிருந்தது.

பெருஞ்சாணி அணைக்கு விநாடிக்கு 270 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையின் நீர்மட்டம் 59.90 அடியாக இருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 327 கனஅடி தண்ணீர்

பாசனத்துக்காகத் திறந்துவிடப்பட்டிருந்தது. சிற்றாறு-1 அணைக்கு விநாடிக்கு 18 கனஅடி, சிற்றாறு-2 அணைக்கு விநாடிக்கு 27 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

**பப்பாளியில் மாவுப் பூச்சி தாக்குதல்!**

First Published : 10 Jun 2011 02:07:32 PM IST

தருமபுரி, ஜூன் 9: பப்பாளியைத் தாக்கும் மாவுப் பூச்சிகளில் சில மனித மண்டை ஓடு போன்ற தோற்றத்திலும் உள்ளன.

இந்தப் பூச்சியைக் கட்டுப்படுத்த வேளாண்மைத் துறை சார்பில் ஒட்டுண்ணி விநியோகிக்கப்படுகிறது.

இப் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த ரசாயன மருந்துகளையே விவசாயிகள் பயன்படுத்தி வந்தனர். இருப்பினும், இதன் தாக்கத்தை முழுமையாக கட்டுப்படுத்தும் வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கடந்தாண்டு ஒட்டுண்ணி அறிமுகம் செய்யப்பட்டது.

அஸிரோபேகஸ் எனும் குளவி இனத்தைச் சேர்ந்த இந்த ஒட்டுண்ணி கிராமத்துக்கு 50 எண்ணிக்கையில் விடுவித்தால் அது முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்து பல்கிப் பெருகும். இதன் பிரதான உணவே மாவுப்பூச்சிகள்தான். எனவே, மாவுப் பூச்சியை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும்.

விவசாயி ஒருவரது தோட்டத்தில் விடப்படும் ஒட்டுண்ணியே பல்கிப் பெருகி அருகாமையில் உள்ள அனைத்துத் தோட்டங்களுக்கும் பயன்படுத்த முடியும்.

தினமலர்

**மஞ்சள் விலை ஒரே நாளில் ரூ. 1,873 சரிவு**

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2011,05:38 IST

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மண்டிகளில் நேற்று நடந்து ஏலத்தில் ஒரே நாளில் 1,873 ரூபாய் விலை வீழ்ச்சி அடைந்ததால், விவசாயிகள் அதிர்ச்சி அடைந்தனர்.மஞ்சள் விளைச்சல் அதிகரிப்பு, வடமாநிலங்களில் தேவை குறைவு போன்ற காரணத்தால், மஞ்சள் விலை ஆறு மாதங்களாக தொடர் சரிவை சந்தித்து வருகிறது. நேற்று முன்தினம் திடீரென மஞ்சள் மூட்டைக்கு 300 ரூபாய் வரை விலை உயர்ந்தது. விலையேற்றத்தால் விவசாயிகளும் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

நேற்று காலை துவக்கத்தில் இருந்தே மண்டிகளுக்கு இருப்பு வைத்திருந்த மஞ்சளை ஏராளமானோர் கொண்டு வந்து விற்பனை செய்தனர்.ஆனால், ஒரே நாளில் மீண்டும் விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு 1,873 ரூபாயும், கிழங்கு குவிண்டால் 1,079 ரூபாயும் குறைந்துள்ளது, விவசாயிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.
நேற்று மார்க்கெட் நிலவரப்படி, ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் விரலி 7,419 - 7,631க்கு விற்றது. கிழங்கு 5,546 - 7,959 ரூபாய், கிழங்கு 6,138 - 6,889 ரூபாய்கு விற்றது. ஈரோடு சொசைட்டியில், விரலி 7,691 - 8,529 ரூபாய்க்கு விற்றது, நேற்று 6,089 0 7,989 ரூபாய்க்கு ஏலம் போனது.

**வேளாண் பல்கலையில் பட்டப்படிப்பு கலந்தாய்வு**

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2011,01:13 IST

கோவை : கோவை, வேளாண் பல்கலைக் கழகத்தில் இளம் அறிவியல் பட்டப் படிப்புக்கான கலந்தாய்வு கூட்டம், வரும் 20ம் தேதி முதல் துவங்குகிறது.முதல்வர் ராஜராஜன் வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் இளம் அறிவியல் தரப்பட்டியல் வரும் ஜூன் 13ம் தேதி வெளியிடப்படும். முதல் கட்ட கலந்தாய்வு கூட்டம் ஜூன் 20 முதல் 25ம் தேதி வரை, பல்கலைக்கழக வளாகத்தில் நடக்கிறது. வரும் 13ம் தேதி தீதீதீ.tணச்த.ச்ஞ்.டிண என்ற இணையதளம் மூலம் தரப்பட்டியலை பார்க்க முடியும். கலந்தாய்வு கடிதம் பதிவு அஞ்சல் மூலமாக, தகுதியுடைய மாணவர்களுக்கு அறிவிக்கப்படும் என, அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயத்துறையின் திட்டங்கள் தோல்வியில் முடிய காரணம் என்ன?**

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2011,21:56 IST

தேனி : தேவையறிந்து திட்டங்களை தீட்டாததால் விவசாயத்துறைக்கான திட்டங்கள் தோல்வியில் முடிகிறது. தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விதமான சூழ்நிலை நிலவுகிறது. மாவட்டத்திற்குள்ளேயே எடுத்துக் கொண்டால் ஒன்றிய வாரியாக சூழ்நிலை வேறுபடுகிறது. விவசாயிகளின் தேவையறிந்து விவசாயத்துறை திட்டங்களை கீழ் நிலை அதிகாரிகள் மூலம் கேட்டு அறிந்து, ஒன்றிய, மாவட்ட வாரியாக கணக்கெடுத்து அதற்கேற்ப திட்டங்களை ஒதுக்கீடு செய்து வழங்கி செயல்படுத்த வேண்டும். இதனால் எந்த ஒரு திட்டத்தையும் வெற்றிகரமாக செயல்படுத்த முடியும். ஆனால் விவசாய,

தோட்டக்கலைத்துறையில் உயர்மட்ட அதிகாரிகள் தங்கள் அறையில் உட்கார்ந்து கொண்டு திட்டங்களை உருவாக்குகின்றனர். மாவட்டம் வாரியாக இலக்கும் நிர்ணயிக்கின்றனர். பலனில்லை: பல மாவட்டங்களில் அத்திட்டம் தேவையற்றதாக, ஒத்துப்போகாததால், விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை. மேலிட அதிகாரிகள் நெருக்கடியால் மாவட்ட நிலையில் அதிகாரிகள் திட்டத்தை செயல்படுத்தியதாக, ஆவணங்களை மட்டும் தயார் செய்கின்றனர். இதனால் திட்டம் முடங்கி எதிர்பார்த்த பலனை தருவதில்லை. எனவே இனிமேலாவது திட்டங்களை விவசாயிகளின் தேவையறிந்து உருவாக்க வேண்டும்.

**உயர்ந்தது கடலை எண்ணெய்விலை இறக்குமதியால் படுத்தது பாமாயில்**

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2011,21:47 IST

விருதுநகர் : கடலை எண்ணெய் விலை உயர்ந்த நிலையில், இறக்குமதியால் பாமாயில் விலை குறைந்துள்ளது. விருதுநகர் மார்க்கெட்டில், சர்க்கரை விலை மூடைக்கு 2770, கடலெண்ணெய் டின்னுக்கு 1380 லிருந்து 1450ஆகவும், சூரியகாந்தி எண்ணெய் 1170 லிருந்து 1190 ஆகவும் உயர்ந்துள்ளது. பாமாயில் 945 லிருந்து 925 ரூபாயாக குறைந்துள்ளது. நிலக்கடலைப்பருப்பு 4300 லிருந்து 4600 ஆகவும், கடலைப் புண்ணாக்கு மூடை 2900 லிருந்து3100 ஆகவும் உயர்ந்துள்ளது. எண்ணெய் மார்க்கெட்டில், நிலக்கடலை பருப்பு வரத்து குறைந்துள்ளதால் கடலை எண்ணெய் விலை உயர்ந்துள்ளது. "பாமாயில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதால் விலை குறைந்துள்ளது,' என எண்ணெய் வியாபாரிகள் தெரிவித்தனர். விருதுநகரில் உளுந்து விலை மூடைக்கு 4900 லிருந்து 4800 , சுமார் ரக உளுந்து 4100 லிருந்து 4900 , பர்மா பருவட்டு உளுந்து 5100 லிருந்து 4900 , நயம் உளுந்தம் பருப்பு 6400, பர்மா பருவட்டு பருப்பு 6200 ரூபாயாக உள்ளது. துவரை 3800 லிருந்து 3600, பொடி துவரை 3000 ரூபாயாக உள்ளது. துவரம் பருப்பு 5600, பொடி துவரம் பருப்பு 4600 ரூபாயாக உள்ளது. பாசிப்பயறு 6400, லயன் பருவட்டு 3900,சுமார் ரகம் 3700 ரூபாயாக உள்ளது. பாசிப்பருப்பு 5100, சுமார் ரகம் 4700 ரூபாயாக உள்ளது. "பருப்பு மார்க்கெட் நிலையாக இருப்பதால் மாற்றங்கள் ஏதும் இல்லை,' என வியாபாரிகள் தெரிவித்தனர்.

மைதா 2180, ரவை 2180லிருந்து 2300 ஆக உயர்ந்துள்ளது. கொண்டைக் கடலை 2850, பொரிகடலை 2130 லிருந்து 2180 ரூபாயாக உயர்ந்துள்ளது. மிளகாய் புது வத்தல் 7800 லிருந்து 8200ரூபாயாகவும், சுமார் ரகம் 7200 லிருந்து 7800 ரூபாயாகவும், முண்டு வத்தல் 7000 லிருந்து 7500 ஆகவும் உள்ளது. சோடை வத்தல் 3400 ரூபாயாகவும், பழைய சோடை வத்தல் 2600 ரூபாயாகவும் உள்ளது. "வத்தல் வரத்து குறைந்து வருவதால், இதன் விலை விலை உயர வாய்ப்புள்ளதாக' வியாபாரிகள் தெரிவித்தனர்.

**பேய்க்குளத்தில் மீன் வளர்ப்பு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2011,01:55 IST

பேய்க்குளம் : பேய்க்குளத்தில் தமிழ்நாடு மீன்வளத்துறை சார்பில் மீன்வளர்ப்பு பயிற்சி நடந்தது. தமிழ்நாடு மீன்வளத்துறை நீர்வள நிலவள திட்டம் கருமேனியாறு உப வடிநிலப் பகுதியைச் சேர்ந்த பயனாளிகளுக்கு மீன்வளர்ப்பு பற்றிய 3 நாட்கள் பயிற்சி துவங்கியது. பயிற்சிக்கு திருநெல்வேலி மீன்துறை உதவி இயக்குனர் ஐசக் ஜெயக்குமார் தலைமை வகித்தார். மீன்துறை உதவி இயக்குனர் பிரபாகரன் பெர்னான்டோ, திருச்செந்தூர் உதவி பொறியாளர் சேர்மராஜன், திருநெல்வேலி துணை வேளாண் அலுவலர் சண்முகசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இளநிலை பொறியாளர் மரியபாக்கியம் வரவேற்றார். பயிற்சியில் பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்ப்பு, நீர்ப்பாசன குளங்களில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்து வளர்த்தல், மீன்குஞ்சு உற்பத்தி, அலங்கார மீன்வளர்ப்பு, ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பு ஆகிய மீன் தொழில் நுட்பங்கள் குறித்து அனுபவம் வாய்ந்த வல்லுனர்களால் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியின் ஒரு பகுதியாக விவசாயிகள் பட்டறிவு பயிற்சியாக அரசாங்க மற்றும் தனியார் மீன் பண்ணைகளுக்கு அழைத்துச் செல்ல உள்ளனர். பயிற்சியில் ஆழ்வை தோட்டக்கலைத்துறை உதவி வேளாண்மை அலுவலர்கள் மணிமாறன், கண்ணன், தனசேகர், மணிமுத்தாறு 3வது, 4வது நீர்ப்பாசன சங்க உறுப்பினர்கள் முருகேசன், கோவிந்தராஜ், பொன்கந்தசாமி, கணபதி, தூத்துக்குடி மாவட்ட மரம் வளர்ப்போர் சங்க தலைவர் அழகேசன், முன்னாள் வி.ஏ.ஓ.,இசக்கிமுத்து, கிராமுனிசி உட்பட பலர் கலந்து கொண்டனர். பயிற்சியில் சுமார் 40 பேர் கலந்து கொண்டனர். முடிவில் திருநெல்வேலி மீன்வளத்துறை ஆராய்ச்சி உதவியாளர் தீபா நன்றி கூறினார்.

**காடை வளர்ப்பில் பின்னோக்கி செல்லும் ராமநாதபுரம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 11,2011,21:31 IST

ராமநாதபுரம் : காடை வளர்ப்பில் நல்ல லாபம் சம்பாதிக்கும் நிலை இருந்தும், ராமநாதபுரம் மாவட்டத்தில் அவற்றை வளர்ப்போர் பண்ணைகளை மூடி வருகின்றனர். மக்கள் விரும்பும் அசைவ உணவில் காடையும் ஒன்றாகி விட்டது. இவற்றை மிகக் குறைந்த முதலீட்டில் வளர்க்கலாம். இவற்றுக்கு நோய் எதிர்ப்பு திறன் அதிகம். 22 சதவீதம் புரதம், ஐந்து சதவீதம் கொழுப்பும் இருப்பதால், ஊட்டச்சத்து நிறைந்தது. 500 காடைகளை கொண்டு, வாரத்துக்கு 1500 குஞ்சுகளை பாதுகாக்கலாம். 140 கிராம் எடையுள்ள குஞ்சில் 100 கிராம் எடை இறைச்சி கிடைக்கும். காடைகளுக்கு உணவாக மக்காசோளம், தவிடு, கடலை புண்ணாக்கு, மீன் தூள், சோயா புண்ணாக்கு வழங்கப்படுகிறது. காடைகள் 22 வயது வரை முட்டையிடும். இதனால் கோழிக்குஞ்சுகளை விட காடை குஞ்சுகளுக்கு அதிக வெப்பம் தேவை. ராமநாதபுரத்தில் காடை

பண்ணைகள் வளர்க்க ஏதுவான சீதோஷ்ண நிலை இருந்ததால், பல்வேறு பகுதிகளில் பண்ணைகள் வைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டன. வேகமான குளிர்காற்று வீசுவது, அடிக்கடி மின் தடை ஏற்படும்போது, வெப்பத்தால் அவை ஒன்றுடன் ஒன்று நெருக்கியடித்து இறக்க நேரிட்டன. காடை வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டு வரும் எம்.மூஷா கூறியதாவது : ராமநாதபுரத்தில் கழுகூரணி, வாணி, குயவன்குடி, பாம்பன், அழகன்குளம் பகுதியில் காடை பண்ணைகள் உள்ளன. கேரளா, சென்னை, கன்னியாகுமரி, ஆந்திரா போன்ற பகுதிகளுக்கு காடைகள் அனுப்பப்படுகின்றன. சரியான வழிநடத்துதல் இன்றியும், பணியாளர்கள் பற்றாக்குறையாலும், மின்தடையாலும், பல பண்ணைகள் மூடப்பட்டு வருகின்றன, என்றார்.

## *கரீப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை 8–19% அதிகரிப்பு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் கரீஃப் பருவ (ஜூன்–அக்டோபர்) பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு 8 முதல் 19 சதவீதம் வரை உயர்த்தியுள்ளது.*

*உரம் – விதை*

*உரம், விதை, பூச்சி மருந்து போன்ற இடுபொருள்கள் விலை உயர்ந்து வரும் நிலையில் கொள்முதல் விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது ஆறுதல் அளிப்பதாக உள்ளது*

என விவசாய துறை வட்டாரங்கள் தெரிவித்தன. தற்போதைய மதிப்பீடுகளின்படி வேளாண் விளைபொருள்களுக்கான உற்பத்தி செலவினம் கடந்த 2009–10–ஆம் நிதி ஆண்டில் 15 சதவீதமும், சென்ற நிதி ஆண்டில் 20 சதவீதமும் உயர்ந்துள்ளது.

நம் நாட்டில் உணவு தானியங்கள் கையிருப்பு தேவைக்கும் அதிகமான அளவில் உள்ளது. எனவே விவசாய உற்பத்திப் பொருள்களுக்கான கொள்முதல் விலையை மிக கடுமையாக உயர்த்த வேண்டிய அவசியமில்லை என மத்திய அரசு கருதுவதாக வேளாண் விளைபொருள்கள் விலை நிர்ணய ஆணையத்தில்ன தலைவர் அசோக் குலாத்தி தெரிவித்தார்.

நெல்லுக்கான ஆதரவு விலை ஒரு குவிண்டாலுக்கு ரூ.80 உயர்த்தப்பட்டுள்ளது. பருப்பு வகைகளுக்கான விலை குவிண்டாலுக்கு ரூ.200 முதல் ரூ.400 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. துவரம் பருப்பு மற்றும் பச்சைப் பயறுக்கு விலை குவிண்டாலுக்கு ரூ.100 உயர்த்தப்பட்டுள்ளது.

ஊக்கத் தொகை

சென்ற ஆண்டில் துவரை, உளுந்து மற்றும் பச்சைப் பயறுக்கு அறுவடை காலத்தில் குவிண்டாலுக்கு ரூ.500 ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டிலும் இதே அளவு ஊக்கத் தொகை அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. முக்கிய உணவு தானியங்களுக்கான போனஸ் தொகை குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உலகில் பாமாயில் மற்றும் சோயா எண்ணெய் இறக்குமதியில் முன்னணி நாடுகளுள் ஒன்றாக இந்தியா உள்ளது. சர்வதேச அளவில் பாமாயில் விலை கடந்த ஓராண்டில் 20 சதவீதம் அதிகரித்துள்ளது. எனவே அதிக அளவில் இறக்குமதி செய்யும்போது அதற்கான செலவினமும் கடுமையாக உயர்ந்து விடும். எனவே சமையல் எண்ணெய்க்காக இறக்குமதியை அதிகம் சார்ந்திருப்பதை குறைக்கும் வகையில் எண்ணெய் வித்துக்களுக்கான ஆதரவு விலையையும் மத்திய அரசு கணிசமாக உயர்த்தியுள்ளது.

நெல் சாகுபடி

நெல் சாகுபடியை பொறுத்தவரை உரம், விதை உள்ளிட்ட இடுபொருள்களுக்கான செலவினம் 70 சதவீதம் உயர்ந்துள்ளது. இதன் காரணமாகவே கொள்முதல் விலை நன்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் நெல் சாகுபடி பரப்பளவு அதிகரித்து உற்பத்தியும் பெருகும். இந்தியாவில் நெல் உற்பத்தியில் ஆந்திரா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் முன்னிலை வகிக்கின்றன.

## ஜனவரி – மார்ச் மாத காலத்தில் தேயிலை இறக்குமதி 16% குறைந்தது

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

கொல்கத்தா

நடப்பு ஆண்டு ஜனவரி – மார்ச் மாத காலத்தில் தேயிலை இறக்குமதி, அளவின் அடிப்படையில் 16 சதவீதம் சரிந்து, 50.20 லட்சம் கிலோவிலிருந்து 42.30 லட்சம் கிலோவாக குறைந்துள்ளது. எனினும் மதிப்பின் அடிப்படையில் இறக்குமதி 24.5 சதவீதம் உயர்ந்து ரூ.95.54 கோடியாக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் ரூ.76.76 கோடியாக இருந்தது.

உற்பத்தி

ஏப்ரல் மாதத்தில் நம் நாட்டில தேயிலை உற்பத்தி 6.88 கோடி கிலோவாக சற்று அதிகரித்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 6.82 கோடி கிலோவாக இருந்தது. உற்பத்தியில் அதிக வளர்ச்சி ஏற்படாததற்கு நாட்டின் தேயிலை மையமான அசாமிலும், தென்மாநிலங்களிலும் உற்பத்தி குறைந்ததுவே காரணம் என்று கூறப்படுகிறது.

இந்தியாவின் தேயிலை உற்பத்தியில் அசாம் மாநிலத்தின் பங்களிப்பு 50 சதவீதமாக உள்ளது. அங்கு தேயிலை உற்பத்தி 3 சதவீதம் குறைந்து 3.70 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது என தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது. தென் மாநிலங்களில் உற்பத்தி 4 சதவீதம் சரிந்து 1.93 கோடி கிலோவாக குறைந்துள்ளது.

சர்வதேச அளவில் தேயிலை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. ஜனவரி–ஏப்ரல் மாத காலத்தில் தேயிலை உற்பத்தி 16.32 கோடி கிலோவாக ஓரளவு உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 16.23 கோடி கிலோவாக இருந்தது.

ஏற்றுமதியும் சரிவு

ஏப்ரலில் தேயிலை ஏற்றுமதி 11 சதவீதம் சரிவடைந்து 1.14 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 1.28 கோடி கிலோவாக இருந்தது. ஜனவரி–ஏப்ரல் மாத காலத்தில் தேயிலை ஏற்றுமதி 24 சதவீதம் குறைந்து 5.10 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது.